**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 115 of 2023

Depositions of PW - 2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : ஜெயக்குமார்
Father's Name : த/பெ. கந்தசாமி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of February** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது சூலூரில் வசித்து சிமெண்ட் கடை நடத்தி வருகிறேன்.

2. கடந்த 01.10.2023 ம் தேதியன்று காலை 7.30 மணியளவில் என்னுடைய அம்மா ஈஸ்வரி அவர்கள் ஜெர்மன் காடனில் உள்ள எங்கள் வீட்டின் முன்னால் வாசல் தெளித்து கொண்டிருந்தார்கள். நான் 10, 15 அடி தூரத்திலிருந்த பெஞ்சில் அமர்ந்த தேநீர் அருந்தி கொண்டிருந்தேன். அப்பொழுது என்னுடைய அம்மாவின் முன்னால் ஒரு இருசக்கர வாகனம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி கடந்து சென்றது போல் இருந்தது.

3. மீண்டும் சில நிமிடங்களுக்குள் அந்த இருசக்கர வாகனம் என் அம்மாவை தாண்டி சென்றபோது என்னுடைய அம்மா திடீரென்று அலறினார். உடனே நான் என்

அம்மாவின் அருகில் சென்று பார்த்தபோது என் அம்மா அருகிலிருந்து ஒரு வேகமாக ஓடினார். 5, 6 அடி தூரத்தில் நின்றிருந்த அப்பாச்சி இருசக்கர வாகனத்தில் ஏறி சென்று விட்டார். ஏதோ விபரீதம் ஏற்பட்டிருக்கிது என்று கருதி நான் இருசக்கர வாகனத்தின் பின்னால் சிறிது தூரம் ஓடினேன்.

4. அவர்களை என்னால் பிடிக்க இயலவில்லை. நான் என் அம்மாவை பார்ப்பதற்காக திரும்பி வந்தேன். என் அம்மா அவருடைய 3 பவுன் செயினை பிடுங்கி சென்று விட்டதாக கூறினார். அம்மாவை வீட்டிற்குள் கூட்டி சென்றேன். என் அம்மா பயந்து விட்ட காரணத்தினால் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அன்றைய தினம் முழுவதும் என் அம்மா மருத்துவமனையில் தான் இருந்தார். அதனால் நான் மறுநாள் புகார் அளித்தேன்.

5. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நான் அளித்த புகார் ஆகும். **(புகார் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலீசாருக்கு சம்பவ இடத்தை அடையாளம் காண்பித்தேன். வண்டியில் சென்ற இருவரும் என்னை திரும்பி பார்த்ததால் அவர்களை எனக்கு அடையாளம் தெரியும். ஆஜர் எதிரிகள் தான் சம்பவ தினத்தன்று இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் ஆவார். அதன்பின்னர் 10ம் தேதியன்று காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்திருந்தார்கள்.

6. காவல் நிலையத்தில் வைத்து எதிரிகள் வந்த இருசக்கர வாகனம் மற்றும் நகையை அடையாளம் காண்பித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள வண்டி மற்றும் நகையை காவல் நிலையத்தில் அடையாளம் காண்பித்தேன். சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகள் நீல நிற சட்டை அணிந்தவரை அடையாளம் காட்டி (2ம் எதிரி ஜாபர்) அவர் தான் என் அம்மா அருகிலிருந்து ஓடி போனவர் ஆவார் என்றும் பிங்க் நிற டீசர்ட் அணிந்துள்ளவரை (1ம் எதிரி யுனோஸ் உசேன்) அடையாளம் காட்டி இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் என்றும் சாட்சியம் அளிக்கிறார். **(இருசக்கர வாகனம் உள்ள புகைப்படங்கள் அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

7. பின்னர் காவல் நிலையத்திலிருந்து 25.10.2023ம் தேதியன்று எதிரிகளை அடையாளம் காண்பிக்க அழைப்பாணை வந்துள்ளதாக கோரி என்னை அழைத்ததன் பேரில் 26.10.2023ம் தேதியன்று கோவை மாவட்டம் மத்திய சிறைக்கு சென்று மதிய வேளையில் அடையாள அணிவகுப்பின் போது நீதித்துறை நடுவர் முன்னிலையில் எதிரிகளை அடையாளம் காண்பித்தேன். பின்னர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து செயினை திரும்ப பெற்று கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. எங்களுடைய வீட்டிலிருந்து காவல் நிலையம் 1 கி.மீ தூரத்தில் உள்ளது. சம்பவ தினமானது ஞாயிற்று கிழமை என்றால் சரிதான். எங்களுடைய வீட்டிற்கு எதிரே கதிரவன் என்பவருடைய வீடு உள்ளது. அதற்கு அடுத்து செல்வராஜ் என்வருடைய வீடு உள்ளது. கண்ணன் என்பவரின் வீடும் உள்ளது என்றால் சரிதான். யாருடைய வீட்டிலும் கண்காணிப்பு கேமரா இல்லை.

2. புகாரினை 02.10.2023ம் தேதியன்று காலை 9 மணியளவில் வழங்கினேன். புகார் அளிக்க நான் மட்டும் தான் சென்றேன். ஈஸ்வரி, வில்பட், சித்ரா ஆகியோரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஈஸ்வரி என் அம்மா ஆவார். வில்பட் கடையில் வேலை பார்ப்பவர் ஆவார். புகாரில் எவ்வளவு தூரத்திலிருந்து நான் தேநீர் அருந்த கொண்டிருந்தேன் என்று குறிபிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

3. எங்கள் வீடு அமைந்துள்ள பகுதியில் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் ஓரளவிற்கு நடமாட்டம் இருக்கும். புகாரில் என்னுடைய தாயார் எந்த திசையில் தண்ணீர் தெளித்து கொண்டிருந்தார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். புகாரில் எந்த வகையான இருசக்கர வாகனம் என்றும் அதன் நிறம் குறித்தும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. புகாரில் எதிரியின் அங்க அடையாளங்கள் குறித்து குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

4. புகாரில் செயினின் மாடல் குறித்தும் செயின் நல்ல நிலையில் இருந்ததா அல்லது அறுக்கப்பட்ட நிலையில் இருந்ததா என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. செயின் யாருடையது என்று என்பதற்கான ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகார் மற்றும் போலீஸ் விசாரணையில் யார் இருசக்கர வாகனத்தினை ஓட்டி வந்தார்கள் என்றம் யார் பின்னால் அமர்ந்து வந்தார்கள் என்றும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

5. போலீசார் சம்பவ இடத்திற்கு 10லிருந்து 10.30 மணிக்குள்ளாக உதவி ஆய்வாளர் வந்திருப்பார். அந்த சமயத்தில் நான் தான் போலீசாருடன் இருந்தேன். வேறு யாரும் அந்த சமயத்தில் அங்கில்லை என்றால் சரிதான். அதற்கு பின்னர் போலீசார் சம்பவ இடத்திற்கு தெரியவில்லை. நான் வந்ததை பார்க்கவில்லை. போலீசார் என்னை 2ம் தேதியன்று 10.30 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள்.

6. போலீசார் என்னை விசாரிக்கும்போது நான் மட்டும் தான் இருந்தேன். என் அம்மா சிகிச்சை பெற்றது குறித்து புகார் மற்றும் போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு கூறவிலலை என்றால் சரியல்ல. சிகிச்சை பெற்றதற்கான ஆவணத்தை இவ்வழக்கில்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 2 ம் தடவை போலீசார் என்னை விசாரிக்கவில்லை. தொலைபேசியில் தான் அழைத்தார்கள். நான் மதியம் 3 லிருந்து 4 மணியளவில் காவல் நிலையத்திற்கு சென்றேன்.

7. அப்பொழுது நான் மட்டும் தான் காவல் நிலையத்திற்கு சென்றேன். உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் ஆகியோர் இருந்தார்கள். பொருட்களை அடையாளம் காண்பித்தேன். புாகர் அளிக்க வந்தவர்கள் இருந்தார்கள். வழக்கு சம்மந்தப்பட்ட யாரும் இல்லை என்றால் சரிதான். பொருட்களை அடையாளம் காண்பித்து விட்டு வந்து விட்டேன் என்றால் சரிதான்.

8. நகையை தவிர்த்து வேறு எதையும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை பார்த்தேன். இருசக்கர வாகனத்தின் பதிவெண் டிஎன் 60- 5595 ஆகும். அதை மட்டும் தான் பின்னல் ஓடிய போது என்னால் பார்க்க முடிந்தது. புகார் மற்றும் போலீஸ் விசாரணையில் இருச்சக்கர வாகனத்தின் பதிவெண் குறித்து குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். கைப்பற்றபட்டதாக கூறப்படும் நகை போன்ற மாடல் சந்தையில் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான்.

9. புகார் மற்றும் போலீஸ் விசாரணையில் தங்க செயினை பறித்து கொண்ட அவர்கள் வந்த பைக்கில் வேகமாக சென்று விட்டார்கள் என்று கூறியுேள்ளேன் என்றால் சரிதான். செயின் அறுந்துவிட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அடையாள அணிவகுப்பு நடத்த அழைப்பாணை கொடுத்தார்களா என்றால் அழைப்பாணை வந்திருப்பதாக தொலைபேசியில் தான் கூறினர்கள். அழைப்பாணையை நான் வாங்கவில்லை. போலீசார் அழைத்ததன் பேரில் சென்றேன் என்றால் சரிதான்.

10. சிறைச்சாலை சென்றபோது மதியம் 3 லிருந்து 4 மணியிருக்கும். அடையாள அணிவகுப்பு நடத்தும்போது எதிரிகள் ஒரு முறை லுங்கியும் சட்டையும் அணிந்திருந்தார்கள். அதன்பிறகு பேண்ட் அணிந்திருந்தார்கள். குறிப்பாக தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. காவல் துறையினர் தான் எனக்கு எதிரியை அடையாளம் காட்டினார்கள் என்றால் சரியல்ல. அங்கு நீதித்துறை நடுவர் தான் இருந்தார்.

11. அங்க அடையாளம் குறித்து என்னை விசாரிக்கவில்லை. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் காவல் துறையினர் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் புகார் அளிக்கப்படவில்லை என்றாலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2024.02.05 18:16:26 -1000

<u>மறுவிசாரணை</u> இல்லை

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**